2018-ம் வருடம் நவம்பர்.மாதம் 14-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கையின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.சோ.பார்த்தசாரதி.BPT.Msc(Phy)
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

---------

**1.**ஆம்பூர் நகராட்சி **2008–**ஆம் ஆண்டு முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சியாகும். இதன் மொத்த பரப்பளவு **17.97** சதுர கி.மீ. ஆகும். **2011–**ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி **113856** ஆகும். வார்டு எண்ணிக்கை **36** ஆகும். தற்போது நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை **80** நபர்கள். தினசரி சேகரம் ஆகும் குப்பையின் அளவு **45** மெட்ரிக் டன் ஆகும். முதல் நிலை குப்பை சேகரிக்கும் பணிக்கு **54** தள்ளு வண்டிகளும்.**40** டிரை சைக்கிள் ரிக்ஷாக்களும்,**6**மினி ஆட்டோ வாகனங்களும், இரண்டாம் நிலை சேகரித்திற்கு **3** டிப்பர் லாரிகள் மற்றும் **3** டம்பர் பிளேசர் வாகனங்களும் பயன்பாட்டில் உள்ளது. மேலும் தனியார் மயம் மூலம் **120** நபர்களை கொண்டு **20** வார்டுகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மேலும் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை செவ்வனே மேற்கொள்ளும் பொருட்டு கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பணிகளை திடக்கழிவு மேலாண்மை துய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை அனுப்பி நிர்வாக அனுமதி பெற அங்கீகாரம் கோரப்படுகிறது,

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு ரூ.இலட்சத்தில்** |
|---|---|---|
| 1 | Construction of Resource Recovery Centre in Municipal Comost Yard at Tharvazhi | 30.00 |
| 2 | Supply of BOBCAT HTE SKID STEER LOADER - S450 | 21.00 |
| 3 | Supply of Backhoe 4DX | 28.00 |

அலுவலக குறிப்பு. அ. அங்கீகாரம் வழுங்கலாம்

ஆ.மேற்படி பணிகளுக்கான திட்ட பிரேரணையை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குனர், வேலுர் அவர்கள் மூலமாக அனுப்பி நிர்வாக அனுமதி பெற அங்கீகாரம் வழுங்கலாம்.

இ. மேற்படி திட்டத்தில் அரசு மான்ய நிதி ஒதுக்கீடு போக அரசு நிர்ணயம் செய்யும் நகராட்சி பங்களிப்பு தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம். திருத்திய வரவு செலவு திட்டம் **2018–19–**ன் கீழ் ஒப்புதல் வழங்கலாம்,

**ந.க.எண்.331./2018/இ1**

தீர்மான எண்.133 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந்நகராட்சியில் மத்திய அரசு திட்டமான அம்ருத் திட்டத்தின் கீழ் ரூபாய்.165.55 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.மேற்படி திட்டமானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்படயுள்ளது.மேற்படி திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கஸ்பா"ஏ" பகுதியில் கழிவு நீர் உந்து நிலையம் (Water Pumping Station), அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்ட இடத்திற்கு அருகில் சுத்திகரிக்கப்பட்ட நீர் தேக்கத் தொட்டி (Water Pond) மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள, தேவையான இந்நகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லாததால் கஸ்பா"ஏ" பகுதியில் அமைந்துள்ள திரு.பி.கிஷண்லால் என்பவருக்கு சொந்தமான வார்டு-ஏ, பிளாக் எண் -03, நகரளவு எண்.1/1, பழைய சர்வே எண்.144/1ஏ, நிலம் தேர்வு செய்யப்பட்டு இடத்திற்கான விலை நிர்ணயம் செய்து தர கோரி, மாவட்ட ஆட்சித்தலைவர் வேலூர் அவர்களை கோரப்பட்டதற்கிணங்க,

ஆம்பூர் நகராட்சிக்கு அம்ருத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை திட்டத்திற்காக கழிவு நீர் உந்து நிலையம் (Water Pumping Station), சுத்திகரிக்கப்பட்ட நீர் தேக்கத் தொட்டி (Water Pond) மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்க கஸ்பா.ஏ பகுதியில் அமைந்துள்ள திரு.P.கிஷண்லால் என்பவருக்கு சொந்தமான இடத்திற்கான விலை நிர்ணயம் செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர், அவர்களால் தனிநபர் பேச்சுவார்த்தையில் கீழ்கண்டவாறு விலை நிர்ணயம் செய்து செயல்முறை உத்திரவு வழங்கப்பட்டது.

| சொத்து விவரம் | பணிகளின் விபரம் | ஒரு சதுரடிக்கு ரு | தொகை |
|---|---|---|---|
| வார்டு-ஏ, பிளாக் எண் - 03, நகரளவு எண்.1/1, பழைய சர்வே எண்.144/1ஏ, | கழிவு நீர் உந்து நிலையம் (Water Pumping Station), | ரு.452/-வீதம் | 40472.64 சதுரடி X ரு.452/- = **ரு.1,82,93,633/-** |
| | | பத்திரபதிவு கட்டணம் 4% | **ரு. 7,31,745.32/-** |
| | | **மொத்தம்** | **ரு.1,90,25,378.32/-(Rounded) ரு.1,90,25,378/-** |
| | சுத்திகரிக்கப்பட்ட நீர் தேக்கத் தொட்டி (Water Pond) | ரு.452/-வீதம் | 40494.17சதுரடி X ரு.452/- = **ரு.1,83,03,364.80/-** |
| | | பத்திரபதிவு கட்டணம் 4% | **ரு. 7,32,134.26/-** |
| | | **மொத்தம்** | **ரு.1,90,35,499.10/-(Rounded) ரு.1,90,35,499/-** |
| | கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) | ரு.452/-வீதம் | 40472.64சதுரடி X ரு.452/- = **ரு.1,82,93,633/-** |
| | | பத்திரபதிவு கட்டணம் 4% | **ரு. 7,31,745.32/-** |
| | | **மொத்தம்** | **ரு.1,90,25,378.32/-(Rounded) ரு.1,90,25,378/-** |
| | | **பெரு மொத்தம்** | **ரு.5,70,86,255/-** |

எனவே, மேற்படி இடத்தினை நகராட்சி பெயருக்கு கிரையம் பெறவும், அதற்காகும் செலவினத் தொகைக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் மூலதன மானிய நிதி மானியம் பெற்று கிரையம் பெற அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1.அங்கீகாரம் வழங்கலாம்.

2.மேற்படி திட்டப்பணியின் அவசியம் கருதி, மேற்கண்ட இடத்தில் கழிவு நீர் உந்து நிலையம் (Water Pumping Station), சுத்திகரிக்கப்பட்ட நீர் தேக்கத் தொட்டி (Water Pond) மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்கும் பணியினை மேற்கொள்ள வேலூர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுமதி வழங்க அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1742/2015/இ2

தீர்மான எண்.134 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. இந் நகராட்சியில் கல்வி நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிக்கு 11.12.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரு. இலட் சத்தில்) | ஒப்பந்தாரர் பெயர் (திரு/திருமதி) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | உமர்ரோடு நகராட்சி துவக்கப்பள்ளி கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல், வர்ணம் பூசுதல் மற்றும் மீட்டர் பாக்ஸ் மாற்றி அமைத்தல். | 5.00 | 1.எஸ்.அருணாசலம்<br>2. ஏ.வி.நாகராஜன் | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br>0.90% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு:- மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு எஸ்.அருணாசலம் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1260/2018/இ1

தீர்மான எண்.135 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந்நகராட்சியில் அம்ருத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை திட்ட பணி நடைபெறுவதால், ADB வங்கியின் நிபுணர்கள் ஆய்வு மேற்கொள்ள உள்ளனர். மேற்படி ஆய்வின் போது 2012-13ஆம் ஆண்டு முதல் 2016-17ஆம் ஆண்டு வரையிலான உள்ளாட்சி தணிக்கை துறையால் சான்றளிக்கப்பட்ட வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி ஆகியவற்றின் ஆண்டு கணக்குகளின் விபர நகல்கள் 5 எண்ணிக்கை அளிக்க வேண்டியுள்ளதால் பக்கம் ஒன்று நகல் எடுக்க மற்றும் புத்தகம் (Register) ஒன்று பைன்டிங் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்தொகை **ரூ 30,000/–க்கு** அங்கீகாரம் கோரப்படுகின்றது. மேற்படி பணியின் அவசியத்தை கருதி, 30.11.2018-ம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி** | **விலைப்புள்ளி தொகை ரூ** | |
|---|---|---|---|
| | | **பக்கம் ஒன்று நகல் எடுக்க** | **புத்தகம் (Register) ஒன்று பைன்டிங் செய்ய** |
| 1 | எஸ். சரவணன்<br>கிங் ஆப்செட் பிரின்டர்ஸ், ஆம்பூர். | 1.00 | 50.00 |
| 2. | ஸ்ரீ சாரதா பிரிண்டர்ஸ்,<br>ஆம்பூர். | 1.25 | 60.00 |
| 3. | உமா ஆப்செட் & கிராபிக்ஸ்,<br>ஆம்பூர். | 1.50 | 75.00 |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள குறைவான விலைப் புள்ளியினை வழங்கியுள்ள திரு. திரு.சரவணன், கிங் ஆப்செட் பிரின்டர்ஸ், என்பவரது விலைப் புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. மேற்கண்ட பணிகளின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகளின் கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1254/2018/இ2
தீர்மான எண்.136 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. ஆம்பூர் நகராட்சி 2008–ஆம் ஆண்டு முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சியாகும். இதன் மொத்த பரப்பளவு 17.97 சதுர கி.மீ. ஆகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 113856 ஆகும். வார்டு எண்ணிக்கை 36 ஆகும். தற்போது நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 80 நபர்கள். தினசரி சேகரம் ஆகும் குப்பையின் அளவு 45 மெட்ரிக் டன் ஆகும். முதல் நிலை குப்பை சேகரிக்கும் பணிக்கு 54 தள்ளு வண்டிகளும்.40 டிரை சைக்கிள் ரிக்ஷாக்களும்,6மினி ஆட்டோ வாகனங்களும், இரண்டாம் நிலை சேகரித்திற்கு 3 டிப்பர் லாரிகள் மற்றும் 3 டம்பர் பிளேசர் வாகனங்களும் பயன்பாட்டில் உள்ளது. மேலும் தனியார் மயம் மூலம் 120 நபர்களை கொண்டு 20 வார்டுகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது தூய்மை இந்தியா திட்டம் 2015–16–ன் கீழ் ரூ.348.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சிக்கு சொந்தமான தார்வழி உரக்கிடங்கில் குப்பைகள் தரம் பிரிப்பதற்கான கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்,22866/2018/ப்பி3 நாள்,20.08.2018–ல் திடக்கழிவு மேலாண்மை – தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 13.08.2018-தேதிய 7–வது மாநில உயர்மட்டக்குழு கூட்டத்தில் மரபுவழி கழிவுகளை (Legacy Waste) தாது பொருட்களாக (Bio Mining) மாற்றுதல் பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதன்பேரில்,ஆம்பூர் நகராட்சிக்கு சொந்தமான தார்வழி பகுதியில் 8.77 ஏக்கர் பரப்பளவிலும் மற்றும் பெத்லகேம் பகுதியில் 3.77 ஏக்கர் பரப்பளவிலும் அமைந்துள்ள உரகிடங்கு பகுதிகளில் பல ஆண்டுகளாக சேகரிக்கப்பட்டுள்ள மரபுவழி கழிவுகளை(Legacy Waste தாது பொருட்களாக (Bio Mining) மாற்றிட ரூ.750.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும், மேற்படி பணியினை திடக்கழிவு மேலாண்மை தூய்மை இந்தியா திட்டத்தில் (SBM) மேற்கொள்ள திட்ட பிரேரணையை நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களின் மூலமாக அரசு செயலாளர், நகராடசி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி பெற அங்கீகாரம் கோரப்படுகிறது,

**அலுவலககுறிப்பு:-**

1. அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான திட்ட பிரேரணையை நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களின் மூலமாக அரசு செயலாளர், நகராடசி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி பெற அங்கீகாரம் வழங்கலாம்.
3. மேற்காணும் திட்டத்தில் அரசுமான்ய நிதி ஒதுக்கீடு போக அரசு நிர்ணயம்செய்யும் நகராட்சி பங்களிப்பு தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம். திருத்திய வரவு, செலவு திட்டம் 2018–19–ன் கீழ் ஒப்புதல் வழங்கலாம்.

ந,க,எண்.இ1/230/2018
தீர்மான எண்.137 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. *இந் நகராட்சிக்குட்பட்ட பகுதியில்* தூய்மை இந்தியா திட்டம் திட கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை உரமாக்கும் மையம் (MICRO COMPOST CENTER) அமைக்க ஒரு இடம் தேர்வு செய்யப்பட்டு *நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர்,சென்னை.5 அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.கஎண்.22866/2018/பி3 நாள்.23.8.2018–ல் நிர்வாக அனுமதி வரப்பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக வரப்பெற்றதை ஏற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது,*

| வ. எண் | பணி விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் குப்பைகளை உரமாக்கும் மையம் அமைத்தல் பணி | 46.10 | 4.96% மதிப்பீட்டு விலையை விட அதிகம் |

மேற்கண்ட இடத்தில் உள்ள பொது மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்ததாலும், பணியினை அவசர அவசியம் கருதி மேற்கொள்ளவுள்ளதாலும் பின்வருமாறு மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு குப்பைகளை உரமாக்கும் மையம் அமைத்தல் பணியினை ஒப்பந்ததாரால் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ளஅதே விலை விகிதத்தில், அதே ஒப்பந்ததாரர் மூலம் பணி செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட இடம் | மாற்றி அமைக்கப்படும் இடம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி | தார்வழி நகராட்சி உரகிடங்கு பகுதி | 46.10 | 4.96 % மதிப்பீட்டு விலையை விட அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u>** மேற்கண்ட இடத்தில் உள்ள பொது மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்ததாலும், திட்டப்பணியினை உடன் முடித்து அரசுக்கு தெரிவிக்க வேண்டியுள்ளதாலும் குப்பைகளை உரமாக்கும் மையம் இடத்தினை மாற்றி அமைக்க அனுமதிக்கலாம்,

ந,க,எண்,331/2018/இ1

தீர்மான எண்.138 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ளவும் அதற்காகும் மதிப்பீடு தொகைகளுக்கும் அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடுதொகை (ரு.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு.எண்.1-ல் இமாம் நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 5.00 |
| 2 | வார்டு.எண்.1-ல் மளிகைதோப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 3.50 |
| 3 | வார்டு.எண்.4-ல் கஸ்பா.அ மெயின் ரோடில் நகராட்சி ஆரம்ப பள்ளி எதிர்புறம் உள்ள மேற்குபுற குறுக்கு சந்திற்கு சிமெண்ட்தளம் அமைத்தல். | 0.75 |
| 4 | வார்டு.எண்.4-ல் கஸ்பா.அ மெயின் ரோடு மற்றும் அப்புகான் தெரு சந்திப்பில் புதிய சிறுபாலம் அமைத்தல் | 0.75 |
| 5 | வார்டு.எண்.8-ல் பேஷ்மாம் நகர் பிரதான தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 10.00 |
| 6 | வார்டு.எண்.12-ல் மூ.கா.கொல்லை பகுதி குறுக்கு தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 8.50 |
| 7 | வார்டு.எண்.13-ல் நாட்டாம்கார புராந்தீன் கொல்லை 1-வது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 5.00 |

| | | |
|---|---|---|
| 8 | வார்டு.எண்.15-ல் சைலப்பை உசேன் தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 3.50 |
| 9 | வார்டு.எண்.17-ல் ஓ.வி.ரோடு பாலாறு சந்திப்பில் உள்ள காங்கர்தக்கியா மசூதி கடைசி பகுதியில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால்வாயினை அப்புறப்படுத்தி புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 3.10 |
| 10 | வார்டு.எண்.30-ல் பெத்லகேம் 4-வது தெரு கடைசியில்(தெற்கு பகுதி) உள்ள 5-வது மற்றும் 6-வது தெருவில் புதியதாக சிறுபாலம் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால்வாயின் மட்டத்தை உயர்த்தி அமைத்தல். | 1.50 |
| 11 | வார்டு.எண்.36-ல் கஸ்தூரிபாய் 2-வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 2.50 |
| 12 | வார்டு.எண்.36-ல் சாய்பாபா கோயில் 7-வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 9.00 |
| 13 | நகராட்சி அலுவலகத்தில் முதல் மாடியில் புதியதாக கட்டப்பட்டுள்ள அலுவலக அறைகளில் உள்ள கண்ணாடி ஜன்னல்களுக்கு திரைச்சீலை கம்பிகளுடன் திரைச்சீலைகள் அமைத்தல் | 1.00 |

அலுவலககுறிப்பு:- மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அதற்காகும் மதிப்பீடு தொகைகளுக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1396/2018/இ1

தீர்மான எண்.139 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

8. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 25 முதல் 36 வரையுள்ள பகுதியில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை 2018-19-ஆம் ஆண்டு மேற்கெள்ள தேவையான மின்பொருட்களை வாங்கிக்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ 5.00லட்சத்திற்கு தீரமான எண் 300 நாள்: 02.02.2018-ல் அங்கிகாரம் பெற்று பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி பணியினை தொடர்ந்து மார்ச் - 2019-ஆம் மாதம் வரை மேற்கொள்ள ஆகும் கூடுதல் செலவினத் தொகை **ரூ 1.50 லட்சத்திற்கு** அங்கிகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:** அங்கீகாரம் வழங்கலாம். மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்: 143/2018/இ2

தீர்மான எண்.140 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

9. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 25 முதல் 36 வரையுள்ள பகுதியில் பொருத்தப்பட்டுள்ள பல தெருவிளக்குகளை Manual On and Off செய்யப்பட்டு வருவதால் உரிய நேரத்தில் தெருவிளக்குகளை On and Off செய்வதில் தாமதம் ஏற்படுகின்றது. எனவே, மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கெள்வதில் உள்ள சிரமத்தினை சரிசெய்ய 50 எண்ணிக்கை தனியங்கி On and Off Swatches வாங்கி பொருத்திட ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 5.50லட்சத்திற்கு அங்கிகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:** அங்கீகாரம் வழங்கலாம். மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1237/2018/இ2

தீர்மான எண்.141 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

10. இந்நகராட்சியின் 2017-18-ம் ஆண்டு தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டு கணக்கு (பொதுநிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி) 5 பிரதிகள் பிரின்ட் எடுத்து பைன்டிங் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ 50,000/–க்கு அங்கீகாரம் கோரப்படுகின்றது. தணிக்கை அறிக்கையின் அவசியத்தை கருதி, 07.12.2018-ம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் & மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ | |
|---|---|---|---|
| | | பக்கம் ஒன்று பிரிண்ட் எடுக்க | புத்தகம் (Register) ஒன்று பைன்டிங் செய்ய |
| 1 | எஸ். சரவணன்<br>கிங் ஆப்செட் பிரின்டர்ஸ், ஆம்பூர். | 2.00 | 50.00 |
| 2. | ஸ்ரீ ஹரி பிரிண்டர்ஸ்,<br>ஆம்பூர். | 2.50 | 60.00 |
| 3. | உமா ஆப்செட் & கிராபிக்ஸ்,<br>ஆம்பூர். | 2.75 | 75.00 |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள குறைவான விலைப் புள்ளியினை வழங்கியுள்ள திரு. திரு.சரவணன், கிங் ஆப்செட் பிரின்டர்ஸ், என்பவரது விலைப் புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. மேற்கண்ட பணிகளின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகளின் கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்:1224/2018/இ2**

தீர்மான எண்.142 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

11. இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையங்களான சாரங்கல், நரியம்பட்டு, ஆணைமடுகு (மாங்காய் தோப்பு) வண்ணாந்துரை, நதிசீலாபுரம் மற்றும் சாணிக்கணவாய் மேடு ஆகிய நிலையங்களில் உள்ள நீர் உறிஞ்சி கிணறு திறந்த வெளி கிணறு மற்றும் ஆழ்துறை கிணறு, மேலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறுகளில் உள்ள மின்மோட்டார் மற்றும் குழாய் வால்வுகளை இயக்கவும் நகராட்சியில் போதுமான பணியாட்கள் இல்லாததால் மேற்படி பணியினை தனியார் மூலம் (Out Sourcing) 16 எண்ணிக்கை பணியாளர்களை கொண்டு டிசம்பர்-2018 வரை மேற்கொள்ள தீர்மான எண் 15 நாள்: 14.05.2018-ல் தொகை ரூ.9.96 லட்சத்திற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு குடிநீர் விநியோக செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை கருதி மேற்கண்ட பணியிணை மார்ச் - 2019 வரை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 3,65,760/-க்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1.குடிநீர் விநியோக பணியின் அவசியத்தை கருதி மேற்கண்ட பணியிணை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

2.மேற்கண்ட பணியிணை ஏற்க்கனவே மேற்கொண்டு வரும் அதே, ஒப்பந்ததாரரை கொண்டு மேற்கொள்ளவும், மேற்படி பணிக்காகும் செலவினத்தை குடிநீர்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.460/2018/இ2**

தீர்மான எண்.143 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

12. இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையங்களான சாரங்கல், நரியம்பட்டு, ஆணைமடுகு (மாங்காய் தோப்பு) வண்ணாந்துரை, நதிசீலாபுரம் மற்றும் சாணிக்கணவாய் மேடு ஆகிய நிலையங்களில் உள்ள நீர் உறிஞ்சி கிணறு, திறந்த வெளி கிணறு மற்றும் ஆழ்துறை கிணறு, மேலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறுகளில் உள்ள மின்மோட்டார் மற்றும் குழாய் வால்வுகளை இயக்கவும் நகராட்சியில் போதுமான பணியாட்கள் இல்லாத காரணத்தில் Outsoucring அடிப்படையில் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியாளர்களுக்கு தொழிலாளர் சேமநலநிதி செலுத்திட கோரி தொழிலாளர் சேமநலநிதி வாரியம் (EPF) அலுவலகம் வேலூரிலிருந்து தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருவதால் அடிப்படை சம்பளத்தில் நாளொன்றிற்கு ரூ.254X12%=ரூ.30.48 **(Round of. ரூ.31/-)** ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு மதிப்பீட்டில் கூடுதலாக சேர்க்க வேண்டியுள்ளது. எனவே, 16 பணியாளர்களுக்கு அக்டோபர்.2018 முதல் மார்ச்.2019 வரையிலான காலகட்டங்களுக்கு EPF செலுத்த ஆகும் உத்தேச செலவினத் தொகை **ரூ.90272/-**ஐ அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. அங்கீகாரம் வழங்கலாம்.
2. தொழிலாளர் சேமநலநிதி வாரியம் (EPF) அலுவலகம் வேலூரிலிருந்து தொழிலாளர் சேமநலநிதி செலுத்திட கோரி தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருவதால் மேற்கண்ட பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரரை கொண்டு செலுத்தி அதற்குண்டான பட்டியல் தொகையினை ஒப்பந்ததார்க்கு வழங்கிட அங்கீகாரம் வழங்கலாம்.
3. மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.460/2018/இ2**

தீர்மான எண்.144 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

13. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 9 எண்ணிக்கை மேல்நிலைநீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு ஏற்றப்படும் குடிநீரினை நகரப்பகுதிகளுக்கு விநியோகிக்க நகராட்சியில் குடிநீர் திருகுநர் (வால்வு ஆப்பரேட்டர்கள்) இல்லாத காரணத்தில் Outsoucring அடிப்படையில் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியாளர்களுக்கு தொழிலாளர் சேமநலநிதி செலுத்திட கோரி தொழிலாளர் சேமநலநிதி வாரியம் (EPF) அலுவலகம் வேலூரிலிருந்து தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருவதால் அடிப்படை சம்பளத்தில் நாளொன்றிற்கு ரூ.254X12%=ரூ.30.48 **(Round of. ரூ.31/-)** ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு மதிப்பீட்டில் கூடுதலாக சேர்க்க வேண்டியுள்ளது. எனவே, 16 பணியாளர்களுக்கு

அக்டோபர்.2018 முதல் மார்ச்.2019 வரையிலான காலகட்டங்களுக்கு EPF செலுத்த ஆகும் உத்தேச செலவினத் தொகை **ரூ.90272/-**ஐ அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. அங்கீகாரம் வழங்கலாம்.
2. தொழிலாளர் சேமநலநிதி வாரியம் (EPF) அலுவலகம் வேலூாரிலிருந்து தொழிலாளர் சேமநலநிதி செலுத்திட கோரி தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருவதால் மேற்கண்ட பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரரை கொண்டு செலுத்தி அதற்குண்டான பட்டியல் தொகையினை ஒப்பந்ததார்க்கு வழங்கிட அங்கீகாரம் வழங்கலாம்.
3. மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.459/2018/இ2**

தீர்மான எண்.145 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

14. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 9 எண்ணிக்கை மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு தலைமை நீர்ரேற்றும் நிலையங்கள் மற்றும் வேலூர் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக இந்நகராட்சி பகுதிக்கு தினசரி குடிநீர் விநியோகம் மேற்க்கொள்ள நீர்த்தேக்க தொட்டிகளில் நீரேற்றுவதை விநியோகம் செய்ய தேவைப்படும் குடிநீர் குழாய் திருகுநர் (வால்வு ஆப்ரேட்டர்) இல்லாத காரணத்தால் தனியார் ஆட்களை கொண்டு இயக்கவும் குடிநீர் விநியோகத்தினை சீராக மேற்க்கொள்ள மேற்படி பணியினை தனியார் மூலம் (Out Sourcing) 16 எண்ணிக்கை பணியாளர்களை கொண்டு டிசம்பர்-2018 வரை மேற்கொள்ள தீர்மான எண் 15 நாள்: 14.05.2018-ல் தொகை ரூ.9.96 லட்சத்திற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு குடிநீர் விநியோக செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை கருதி மேற்கண்ட பணியிணை மார்ச் - 2019 வரை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை **ரூ 3,65,760/-க்கு** அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. குடிநீர் விநியோக பணியின் அவசியத்தை கருதி மேற்கண்ட பணியிணை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியிணை ஏற்க்கனவே மேற்கொண்டு வரும் அதே, ஒப்பந்ததாரரை கொண்டு மேற்கொள்ளவும், மேற்படி பணிக்காகும் செலவினத்தை குடிநீர்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.459/2018/இ2**

தீர்மான எண்.146: அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

ஓம்/- சோ.பார்த்தசாரதி.
தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி.